# இலங்கை மத்திய வங்கி

**2026 செத்தெம்பர் 15** **வழிகாட்டல்** **2026இன் 01ஆம் இலக்கம்**

## கடன் அட்டை தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்

1. **சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரம்**

இவ்வழிகாட்டல் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதியின் 2.2ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுவதுடன் கடன் அட்டைகளை வழங்குகின்ற அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் (இதனகத்துப்பின்னர் “நிதியியல் பணி வழங்குநர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடையதாதல் வேண்டும்.

கடன் அட்டையொன்றை வழங்குவதனூடாக அட்டை உடைமையாளரொருவருடன் (இதனகத்துப்பின்னர் “வாடிக்கையாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒப்பந்த உறவொன்றினைக் கைச்சாத்திடுகின்ற எவரேனும் நிதியியல் பணி வழங்குநர் (இதனகத்துப்பின்னர் “வழங்குநர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்), கடன் அட்டை தொழிற்பாடுகள் பின்வருகின்ற வழிகாட்டல்களுக்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

2. **குறிக்கோள்**

இவ்வழிகாட்டலின் குறிக்கோளானது கட்டணங்கள், அறவீடுகள், வட்டி வீதங்கள், கட்டணப்பட்டியலிடல் மற்றும் மீள்கொடுப்பனவு நியதிகள் பற்றி தெளிவான வெளிப்படுத்தல்களை உறுதிசெய்தல்; வாடிக்கையாளர்களின் மீள்கொடுப்பனவு இயலளவுகள் பற்றிய பொறுப்புமிக்க கணிப்பீடு; நியாயமற்ற அல்லது தவறாக வழிநடத்துகின்ற நடத்தைகளுக்கெதிராகப் பாதுகாத்தல்; வாடிக்கையாளர் தரவுகளின் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பான கையாளுகை; முறைப்பாடுகளை, பிணக்குகளை, மோசடிக் கோரிக்கைகளை மற்றும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களை செயல்திறன்மிக்கவாறு தீர்த்தல்; மற்றும் நியாயமான மற்றும் விகிதசமமான சேகரித்தல் அத்துடன் அறவீட்டு நடத்தைகள் என்பன மூலம் நியாயமான, வெளிப்படையான, பொறுப்புமிக்க, வாடிக்கையாளரை மையப்படுத்திய கடன் அட்டைத் தொழிற்பாடுகளை ஊக்குவிப்பதாகும்.

3. **நோக்கெல்லை**

இவ்வழிகாட்டல் சில்லறை கொடுகடன் அட்டைகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாதல் வேண்டும். நிறுவனக் கடன் அட்டைகளும் வட்டி விதிப்பைக் கொண்டிராத கடன் அட்டைகளும் இந்நோக்கெல்லையினுள் உட்படலாகாது.

4. **வரைவிலக்கணங்கள்**

**கட்டணப்பட்டியலிடல் சுழற்சி:** காலப்பகுதியானது, அனைத்து கணக்கு நடவடிக்கைளும் பதிவுசெய்யப்படுகின்ற இரு கடன் அட்டை கூற்றுக் காலப்பகுதிக்கிடையில் வழமையாக 28-31 நாட்களாகும்.

**கொடுக்கல்வாங்கல் திகதி:** கொள்வனவு, கொடுப்பனவு, வேறு நடவடிக்கை கடன் அட்டை கணக்கு மீது எத்திகதியில் செய்யப்படுகின்றதோ அத்திகதி

**பதிவிடும் திகதி:** கொடுக்கல்வாங்கலொன்று எத்திகதியில் பதிவுசெய்யப்பட்டு வழங்குநர் மூலம் கடன் அட்டைக் கணக்கிற்கு சேர்க்கப்படுகின்றதோ அத்திகதி

**கூற்றுத் திகதி:** கடன் அட்டை வழங்குநர் கட்டணப்பட்டியலிடல் சுழற்சியின் அனைத்து கணக்கு நடவடிக்கைகளையும் தொகுத்து மாதாந்த கூற்றினை எத்திகதியில் உருவாக்குகின்றாரோ அத்திகதி.

**செலுத்தவேண்டிய நிலுவை:** கொள்வனவுகள், காசு முற்பணங்கள், கட்டணங்கள், அறவீடுகள், ஒன்றுசேர்ந்த வட்டி மற்றும் ஏதேனும் வேறு ஏற்புடைய தொகைகள் உள்ளடங்கலாக ஏதேனும் ஒரு நேரத்தில் வாடிக்கையாளரினால் செலுத்தவேண்டிய மொத்தத் தொகை.

**குறைந்தபட்சக் கொடுப்பனவுத் தேவைப்பாடு:** ஒன்றுசேர்ந்த வட்டி இன்றியும் தாமதக் கொடுப்பனவுக் கட்டணங்களை தவிர்ப்பதற்கும் கணக்கை சிறந்த நிலையில் பேணுவதற்கு உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வாடிக்கையாளர் செலுத்தவேண்டிய மாதாந்த கூற்றில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தொகை.

**உரிய திகதி:** தாமதக் கொடுப்பனக் கட்டணங்கள் போன்ற தண்டப் பணங்களைத் தவிர்ப்பதற்கு ஆக்குறைந்த குறைந்தபட்சத் தொகையினை வாடிக்கையாளர் எத்திகதியில் செலுத்தவேண்டுமோ அத்திகதி.

**கொடுப்பனவுத் திகதி:** ஏதேனும் செலுத்தவேண்டிய நிலுவையின் தொகையினை எத்திகதியில் வாடிக்கையாளர் செலுத்துகின்றாரோ அத்திகதி.

**சலுகைக் காலம்:** கூற்றுத் திகதிக்கும் உரிய கொடுப்பனவு திகதிக்கும் இடையிலான காலம், நிலுவை முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் வட்டி எதுவும் அறவிடப்படாது.

**நாள் எண்ணிக்கை:** செலுத்தவேண்டிய நிலுவைகள் மீது வட்டியைக் கணிப்பிடுவதில் பயன்படுத்தப்படும் கலண்டர் நாட்களின் எண்ணிக்கை.

**கொடுகடன் வரையறை:** அட்டை மீது கடன்பெறுவதற்கு அல்லது செலவிடுவதற்கு அட்டை வழங்குநர் வாடிக்கையாளரை இயலச்செய்கின்ற கொடுகடனின் குறைந்தபட்சத் தொகை.

## 5. குறிப்பான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

### 5.1. கடன் அட்டை வழங்கலும் முகாமைத்துவமும்

5.1.1 ஒவ்வொரு வழங்குநரும் ஏதேனும் பெறுமதிசேர்க்கப்பட்ட அம்சங்கள், வெகுமதிகள், பிணைந்த ஒழுங்கேற்பாடுகள் அல்லது அத்தகைய உற்பத்தியுடன் இணைந்த வேறு உற்பத்தி வகையீட்டுநர்கள் என்பவற்றைப் பொருட்படுத்தாது உரிய அட்டைப் பணி வழங்குநரினால் பெயர்குறிக்கப்பட்ட முதன்மை அட்டை வகையின் கீழ் ஒவ்வொரு கடன் அட்டை உற்பத்தியையும் வகைப்படுத்தி வெளிப்படுத்தல் வேண்டும்.

5.1.2 ஒவ்வொரு வழங்குநரும் பாகுபாட்டினைத் தடுப்பதற்கும் அனைவரையும் உள்ளடக்கும் பெறுவழியினை உறுதிசெய்வதற்கும் ஆகக் குறைந்தது ஒரு அணுகல் பண்பொன்றுடன்கூடிய கடன் அட்டைகளை வழங்குதல் வேண்டும்.

5.1.3 ஒவ்வொரு வழங்குநரும் ஓர் (1) ஆண்டினை விஞ்சுகின்ற காலப்பகுதிக்காக செயற்பாடற்றிருக்கும் (கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்காக அட்டை உடமையாளரினால் செயற்படுத்தப்படாமல்) அனைத்து கடன் அட்டைகளையும் இரத்துச்செய்தல் வேண்டும். ஏதேனும் அத்தகைய இரத்துச் செய்தல் பற்றிய முன்கூட்டிய அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்பூட்டல் ஏற்பாடு வழங்குநரின் பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குள் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும்.

5.1.4 ஒவ்வொரு வழங்குநரும் செயற்பாட்டிலிருக்கின்ற ஆனால் ஓர் (1) ஆண்டினை விஞ்சுகின்ற காலப்பகுதிக்கு உபயோகிக்கப்படாத அனைத்து கடன் அட்டைகளையும் முடக்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய முடக்குதல் பற்றிய முன்கூட்டிய அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்பூட்டல் ஏற்பாடு வழங்குநரின் பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குள் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும்.

5.1.5 ஒவ்வொரு வழங்குநரும் கடன் அட்டைகளை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளர்கள் பற்றிய நியாயமான வழங்கலுக்கு முன்னரான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்காக விற்பனை முகவர்களுக்கான பிரமாணமொன்றினைத் தாபித்தல் வேண்டும்.

**5.2. வட்டி வீத நிர்ணயமும் முறையியலும்**

5.2.1 ஒவ்வொரு வழங்குநரும் கடன் அட்டைகள் மீது அறவிடப்படுகின்ற வட்டி வீதத்தின் வெளிப்படைத் தன்மையையும் தெளிவினையும் அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

5.2.2 ஒவ்வொரு வழங்குநரும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி தரப்படுத்தப்பட்ட வட்டி வீதக் கணிப்பீட்டு முறையியல் ஒன்றைப் பின்பற்றுதல் வேண்டும்.

5.2.2.1 கொடுக்கல்வாங்கல் அடிப்படையில் கொடுப்பனவுத் திகதி வரை மாத்திரம் வட்டி கணிக்கப்படுதல் வேண்டும்.

5.2.2.2 வட்டி, நடப்பு மாதத்தின் செலுத்தவேண்டியதாகவிருக்கின்ற தொகைகள் மீது மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்ந்துவருகின்ற கடன் சுழற்சிகளில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல் மீது அறவிடப்படலாகாது.

5.2.2.3 இருப்பத்தொரு (21) நாட்களைக் கொண்ட குறைந்தபட்ச சலுகைக் காலமொன்று வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். செலுத்தவேண்டிய நிலுவை உரிய திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்படுகின்றவிடத்து காசு

முற்பணங்கள் உள்ளடங்கலாக அத்தகைய நிலுவையின் மீது வட்டி எதுவும் அறவிடப்படலாகாது. மேற்குறித்தவை எதுஎவ்வாறிருப்பினும் வழங்குநர்கள் நிறுவனக் கொடுகடன் அட்டைகள் மற்றும் வேறு வட்டி விதிப்பைக் கொண்டிராத கடன் அட்டை உற்பத்திகள் தொடர்பில் அவர்களின் தற்றுணிபில் ஏற்புடைய சலுகைக் காலத்தினை நிர்ணயிக்கலாம், ஆயின் அத்தகைய நியதிகளும் நிபந்தனைகளும் அட்டை உடமையாளருக்கு தெளிவாக வெளிப்படுத்தப்படவேண்டும்.

5.2.2.4 அனைத்து கொடுப்பனவுகளுக்குமான நாள் எண்ணிக்கையினைக் கணிக்கின்ற போது பதிவிடப்பட்ட திகதியன்றி கொடுக்கல்வாங்கல் திகதி கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். வழங்குநர்கள், வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைய கொடுப்பனவு வெட்டு நேரங்களை தெளிவாக தெரியப்படுத்தல் வேண்டும். தெரியப்படுத்தப்பட்ட வெட்டு நேரத்தின் பின்னர் கொடுப்பனவொன்று கிடைக்கப்பெறுகின்றவிடத்து அத்தகைய கொடுப்பனவானது நாள் எண்ணிக்கை கணிப்பிடும் நோக்கங்களுக்காக அத்துடன் வேறு ஏதேனும் ஏற்புடைய கால வரையறைகளுக்காக தொடர்ந்துவரும் நாளன்று மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படாலம்.

5.2.2.5 வழங்குநர்கள், பல்வகை கட்டணப்பட்டியலிடல் சுழற்சிகளுக்கிடையில் அதே கொடுக்கல்வாங்கலுக்காக வட்டியைக் கணிப்பிடுகின்ற போது நாள் எண்ணிக்கைகள் இரட்டிப்பாகக் கணக்கிடப்படுவதில்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

5.2.2.6 வட்டி வீதக் கணிப்பீடுகள் 365-நாள் ஆண்டை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 5.3. கொடுப்பனவுத் தேவைப்படுத்தல்களும் கட்டணங்களும்

5.3.1 ஒவ்வொரு வழங்குநரும் மாதாந்தக் கூற்றில் குறைந்தபட்சக் கொடுப்பனவுத் தேவைப்படுத்தல் மற்றும் கடன் அட்டையுடன் தொடர்புடைய செலுத்தவேண்டிய நிலுவை மீது அறவிடப்படவுள்ள வட்டி மீதான வெளிப்படுத்தலையும் வெளிப்படைத்தன்மையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.3.2 ஒவ்வொரு வழங்குநரும் அனைத்து சந்தைப்படுத்தல் பொருட்களிலும் வழங்குநரின் வலைத்தளம் மீதும் ஒவ்வொரு கடன் அட்டைகளுடன் இணையப்பெற்ற அனைத்து நன்மைகளையும் தெளிவாக வெளிப்படுத்தல் வேண்டும்.

5.3.3 கொடுகடன் வரையறை அதிகரிப்புக்கள், வாடிக்கையாளரின் திட்டவட்டமான கோரிக்கையின் மீது மாத்திரம் செயலுறுத்தப்படுதல் வேண்டும். தன்னியக்கமான அதிகரிப்புக்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

## 6. நடைமுறைப்படுத்தல் காலவரையறை

| முக்கிய நிகழ்வு | தேவைப்பாடு | இறுதித்திகதி |
|---|---|---|
| சபை அனுமதி | உள்ளகக் கொள்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்ட அனுமதி | 2026.10.30 |
| முறைமை/செயன்முறை தயார்நிலை | முறைமைகள், கட்டுப்பாடுகள், மற்றும் அலுவலர் பயிற்சியினை நிறைவுசெய்தல் | 2026.12.30 |

## 7. மேற்பார்வை மீளாய்வு மற்றும் அமுல்படுத்தல்

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கு தளத்திற்கு வெளியேயான மீளாய்வுகள், தளத்திலான பரீட்சிப்புக்கள், கருப்பொருள்சார் மீளாய்வுகள், நிறுவனங்களுடனான கூட்டங்கள் மற்றும் வேறு மேற்பார்வை மதிப்பீடுகள் என்பவற்றை நடாத்தலாம். இவ்வழிகாட்டலுடன் இணங்கியொழுகத்தவறுதல் ஏற்புடைய ஒழுங்குவிதியின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கலாம்.

## 8. நடைமுறைக்குவரும் திகதியும் மீளாய்வும்

இவ்வழிகாட்டல்கள் 2027.01.01 தொடக்கம் நடைமுறைக்குவருதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி சந்தை அபிவிருத்திகள், மேற்பார்வையில் கண்டறியப்படுபவைகள், சட்ட ரீதியான மாற்றங்கள், சர்வதேச நியமங்கள் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு பரிசீலனைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு காலத்திற்குக் காலம் இவ்வழிகாட்டலை மீளாய்வு செய்யலாம், திருத்தலாம், மாற்றீடு செய்யலாம், இடைநிறுத்தலாம் அல்லது புறக்கீடு செய்யலாம்.

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க**
ஆளும் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்